பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 19 திங்கட்கிழமை 03.03.2025 கதிர் 115

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சிக்குள் தொடரும் அக்கப்போரின் ஒரு கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கத்தை நாடாளுமன்ற அரசமைப்பு ஆலோசனைக் ☞ 2

# தமிழ் அரசுக்கு எந்தவகையிலும் புது கூட்டணியால் பாதிப்பில்லை

### சுமந்திரன் தெரிவிப்பு

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணி ஏற்படுத்திய 9 கட்சிக்கள் சேந்த புதிய கூட்டணியால் தமிழ் அரசுக் கட்சிக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்று அதன் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் கட்சியின் மாவட்டக் குழு உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்குப்பதிலளிக்கும்போதுஇதனைத் தெரிவித்தார்.

புதிய கூட்டணியில் 9 கட்சிகள் என்று சொன்னார்கள். பின்னர் அது 8 என்றாகியது. இன்று (நேற்று) அது 7 ஆகக் குறைந்துள்ளது. நாளை அது 5 ஆகவும் குறையும். அது அவர்களின் விருப்பம், அவர்களின் சுயாதீனம். அதில் நாம் தலையிட விரும்பவில்லை.

இவர்களின் இந்தக் கூட்டால் தமிழ் அரசுக் கட்சியின் செல்வாக்கோ, வாக்குகளோ இதனால் எந்தவகையிலும் குறைவுபடாது - என்றார்.

அதேபோன்று தமிழ்க் கட்சிகள் சேர்ந்தியங்குவதற்குத் தமிழ் அரசுக் கட்சி தயாராகவே இருக்கின்றது என்றும், நாடாளுமன்றத் தேர்தல் வரையிலும்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து இயங்கி வந்தனர் என்றும் அவர் தெரிவித்தார். "உள்ளூராட்சித் தேர்தலில் தனித்தனியே போட்டியிடலாம் என்று தெரிவிக்கப்பட்ட முன்மொழிவைத் தவறாகப் புரிந்துகொண்டு அவர்கள் தனித்துச்செயற்படுவதாகஅறிவித்தார்கள், எம்மைப் பொறுத்தவரையில் நாம் கூட்டமைப்பாகவே இருக்கின்றோம். இருப்பினும் அவர்கள் தாம் தனி என்று கூறும் நிலையில் நாம் கூட்டமைப்பு என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. அதனால் தமிழ் அரசுக் கட்சி தனது வீட்டுச் சின்னத்தில் தனித்துப் போட்டியிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் சேர்ந்து இயங்குவது என்பது தேர்தலில் ஒன்றாகப் போட்டியிடுவதை மட்டும் குறிக்காது. தேர்தலின் பின்னர் நாம் சேர்ந்து செயற்படுவதையும் குறிக்கும். நாம் தொடர்ந்தும் சேர்ந்து இயங்குவதற்குத் தயாராகவே இருக்கின்றோம்"என்றார் அவர். ☞ 8

## 4ஆம் கட்ட நிதியை விடுவிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் குறித்த மூன்றாம் கட்ட மீளாய்வு தொடர்பில் எட்டப்பட்ட உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாட்டுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்திருக்கிறது. அதனூடாக இலங்கைக்கு நான்காம் கட்டமாக 334 மில்லியன் டொலர் நிதி விடுவிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு ஆட்சிபீடம் ஏறியதன் பின்னர் நாட்டுக்கு வருகைதந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளால் 2024 நவம்பர் 17 முதல் 22 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் அடுத்த கட்ட ☞ 8

## விவசாயத்துக்கு சேதம் ஏற்படுத்தும் வனவிலங்கு கணக்கெடுப்பு மார்ச் 15

கிராமங்களுக்குள் படையெடுத்து பயிர்களை சேதப்படுத்தும் அனைத்து வனவிலங்குகளின் கணக்கெடுப்பு மார்ச் 15 இலங்கை முழுவதும் அனைத்துக் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நடைபெறும் என்று விவசாயம் மற்றும் கால்நடைத் துறை துணை அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

கணக்கெடுப்புக்கு அரசு அதிகாரிகள் வந்தவுடன், ஐந்து நிமிடங்களுக்குள் தங்கள் தோட்டங்களில் உள்ள நீர்நாய்கள், அணில்கள், மயில்கள் உள்ளிட்ட வனவிலங்குகளின் எண்ணிக்கையைக் விவசாயிகளும் ஊர் மக்களும் கணக்கிட்டு அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று துணை அமைச்சர் கூறினார். உரிமையாளர்கள் இல்லாத நிலங்கள் இருந்தால், அந்தத் தோட்டங்களில் அரசு அதிகாரிகளே கணக்கெடுப்பை மேற்கொள்வார்கள் என்றும் அவர் கூறினார். ☞ 8

# வல்வெட்டித்துறை படுகொலைகளுக்கு இந்தியாவே முழுப்பொறுப்பேற்கவேண்டும்

### உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச திட்டம் அறிக்கை பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும் எனவும் வலியுறுத்து

இந்திய இராணுவத்தால் வல்வெட்டித்துறையில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட வரலாற்றைப் பதிவு செய்யும் 'வல்வெட்டித்துறை: ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்'






என்ற அறிக்கை வெளியீடு நேற்று வடமராட்சியில் இடம்பெற்றது. இந்தப் படுகொலைகளுக்கான முழுப் பொறுப்பையும் இந்தியா ஏற்றுக்கொண்டு, பகிரங்கமாக மன்னிப்புக் ☞ 2

## லஞ்சம் கேட்ட குற்றச்சாட்டில் எஸ்.ஐ, கொன்ஸ்டபிள் கைது

இலஞ்சமாக கோரிய குற்றச்சாட்டில் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் (எஸ்.ஐ.) மற்றும் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 30,000 ரூபா இலஞ்சம் கேட்டனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கல்னேவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். -முறைப்பாட்டாளர் நெல் அறுவடை செய்யும் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தி-ருந்தார். அதன் உரிமையாளர் போலியானவர் என்பதைப் பின்னர் கண்டுபிடித்திருந்தார்.

அவர் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தப் பிரச்சினையைச் சட்ட ☞ 8

# இந்தியாவைத் தாண்டி இங்கு வெளிநாட்டு முதலீடு வருமா?

### கேட்கிறார் மனோ கணேசன்

இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இந்திய பங்காளர்களுடன்தான் வருவார்கள். மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கையை நோக்கி முதலீட்டாளர்கள், இந்தியாவை 'பைபாஸ்' செய்து வருவார்கள் என நினைக்கிறீர்களா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.

மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதிலிருந்து இந்தியாவின் அதானி நிறுவனம் வெளியேறியது குறித்ததனதுகவலையை ☞ 8

### உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான

## மன்னார் மாவட்ட வேட்பாளர்கள் தொடர்பில் தமிழ் அரசு ஆராய்வு

வரவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான மன்னார் மாவட்ட வேட்பாளர்கள் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் மாவட்டக் கிளை செயலாளர் சுமந்திரன் தலைமையில் நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

இடம் பெற உள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக ☞ 8

## கள்ள மணல் ஏற்றிய டிப்பர் மீது பருத்துறையில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் காயம்: மற்றொருவர் தப்பியோட்டம்



அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் சூடு நடத்தியதில் ஒருவர் காயமடைந்தார். யாழ்ப்பாணம் - பருத்தித்துறைபகுதியில்நேற்றுக் ☞ 8

## பிணை

ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தித் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவபுலனாய்வுப்பணியாளர்கள் இருவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு மே 22 தெஹிவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வைத்தியா வீதிப் பகுதியில் வைத்து ஊடகவியலாளர் கீத் நொயார் வானில் கடத்தப்பட்டு தாக்கப்பட்டார்.

இந்தச்சம்பவத்துடத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் சனிக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளினால் நவகத்தேகம மற்றும் எலயபத்துவ பொலிஸ் பிரிவுகளில் கைது செய்யப்பட்டனர். ☞ 8

## பாடசாலை அதிபர் விளக்க மறியலில்

பாடசாலை அதிபர் ஒருவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாணவன் ஒருவரை இந்த அதிபர் தாக்கிக் காயப்படுத்தினார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தாக்கப்பட்டதாகக் கூறப்படும் மாணவர் தொடர்பாக சட்ட மருத்துவ அதிகாரி நடத்திய சோதனையின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு மெதிரிகிரிய பொலிஸாருக்கு உத்தரவிட்ட பதில் ஹிங்குராங்கொட நீதிவான், சம்பவம் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகளின் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

குழுவிற்கு நியமித்தமை தொடர்பான சர்ச்சையும் இப்போது தொடர்கிறது.

வரவு செலவுத் திட்டம் தொடர்பாகக் கடந்த வாரம் இடம்பெற்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த விவகாரத்தை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் பேசப்போய் மூக்குடைபட்ட விடயம் ஊடகங்களில் வெளியாகத் தொடங்கியதை அடுத்து இந்த விவகாரம் சமூக ஊடகங்களில் சூடுபிடிக்கத் தொடங்கியது.

விளக்கம் கெட்டத்தனமாக இது தொடர்பில் பலரும் பல கருத்துக்களையும் தெரிவித்து வந்த நிலையில் அது பற்றி நேற்று மன்னாரில் தெளிவுபடுத்தியிருக்கிறார் சுமந்திரன்.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளின்படி சபாநாயகர் தனக்கான அரசமைப்பு ஆலோசனைக் குழு ஒன்றை நியமிக்கமுடியும். அதற்கான உறுப்பினர்களை ஆளும்தரப்பிலிருந்தும் எதிர்த்தரப்பிலிருந்தும் சபாநாயகரே நியமிப்பார். எதிர்க் கட்சிகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியும் அவர்களை நியமிக்கலாம், அல்லது தனது விருப்பப்படியும் சபாநாயகர் உறுப்பினர்களை நியமிக்கலாம். நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் அப்படித்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால், தன்னைக் கேட்காமல், தனது ஆலோசனையைப் பெறாமல் சத்தியலிங்கத்திற்கு இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது என்று எதிர்க் கட்சிகளின் தலைவர்களது கூட்டத்தில் சிறீதரன் பேசப்போக, அங்கிருந்த ஏனைய தலைவர்களான சஜித், மனோ கணேசன், கஜேந்திரகுமார், ஹக்கீம் என்று அனைவரும் இது உங்கள் உட்கட்சிப் பிரச்சினை அதனை இங்கு கொண்டுவந்து பேசி நேரத்தை வீணடிக்க வேண்டாம் என்ற 'அட்வைஸ்' பண்ண வேண்டிய நிலை தோன்றியது.

இந்த விவகாரம் குறித்து சபாநாயகரிடம் முறையிடத்தான் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரால் சிறீதரன் தூண்டப்பட்டிருந்தார் என்றபோதும் அவர் இதனை எதிர்க் கட்சிகளின் கூட்டத்தில் பேசப்போக விவகாரம் வேறுவிதமாகத் திரும்பிவிட்டது. இதையடுத்து, இந்த விவகாரத்தையொட்டி வழக்கம்போல முகப் புத்தகப் போராளிகள் இந்த விவகாரத்தையும் சுமந்திரனுக்கு எதிரான பரப்புரை ஆயுதமாக்கிக் கொண்டனர். புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்குள் மூக்கை நுழைப்பதற்காகத்தான் சத்தியலிங்கத்தை இந்தக் குழுவின் உறுப்பினராக்கி இருக்கிறார் என்றெல்லாம் கதையளந்தார்கள். அதுமட்டுமல்ல அரசமைப்புக் கவுன்ஸிலில் சிறீதரனை அமைத்திப்படுத்தவே சத்தியலிங்கத்திற்கு நியமனம் வழங்கியுள்ளார் என்றெல்லாம் வசைபாடினார்கள்.

இது குறித்து மன்னாரில் நேற்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது சுமந்திரன் அதற்கான சரியான விளக்கத்தை வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இடம்பெற்றிருப்பது அரசமைப்புக் கவுன்ஸிலில். அது இலங்கையின் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிறுவப்பட்-டுள்ள ஒரு குழு. 10 பேர் கொண்ட அந்தக் குழுவில் பிரதான எதிர்க் கட்சி அல்லாத எதிர்க் கட்சியின் பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்படவேண்டும். அந்தவகையிலேயே சிறீதரன் அந்தக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனால், நாடாளுமன்ற நிலையியல் கட்டளை மூலம் சபாநாயகருக்கு அரசமைப்புத் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட குழுவிற்கே நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்த இரு குழுக்களும் வேறு வேறானவை. சபாநாயகரால் நியமிக்கப்பட்டுள்ள குழு, சபாநாயகருக்கு அரசமைப்புத் தொடர்பான சந்தேகங்களோ குழப்பங்களோ ஏற்படும்போது அது தொடர்பில் ஆராய்ந்து அவருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்படும் ஒரு குழு. இது நாடாளுமன்றத்தின் ஒரு நிலையியல் குழு மட்டுமே. எனவே சிறீதரனின் இடத்திற்கு சத்தியலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்பது பச்சைப் பொய்.

அதேசமயம், இந்த நிலையியற்குழுவிற்கும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. புதிய அரசமைப்பு தொடர்பில் ஆளும்தரப்பு இதுவரையில் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எனவே அதற்கும் சத்தியலிங்கத்தின் நியமனத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

இதற்கிடையே இந்த விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனைக் குளப்பிவிட்டு குதர்க்கம் செய்தவர் கிழக்கைச் சேர்ந்த அவருக்கு நெருக்கமான மற்றொரு உறுப்பினரே என்று தமிழ் அரசுக் கட்சியின் மிக உயர்மட்ட வட்டாரம் ஒன்று கருத்துத் தெரிவித்தது. ''சிறீதரன் அவரது பிடியில் இருப்பதுதான் கட்சிக்குள் இவ்வளவு குழப்பத்திற்கும் காரணம்'' என்று அந்த வட்டாரம் தெரிவித்தது. ''உங்களை நாங்கள்தான் தலைவராக்கினோம் என்று சொல்லிச் சொல்லியே அவரை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டார்கள்'' என்று மற்றொரு வட்டாரம் கவலை தெரிவித்தது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வல்வெட்டித்துறை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரவேண்டும் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதுடன், குற்றமிழைத்தவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும் என்று அந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையை, இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள், நண்பர்கள் வெளியிட்டு வைத்தனர். பாதிக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அகவணக்கம், பொதுச்சுடர் ஏற்றல், மலர் அஞ்சலியை தொடர்ந்து வரவேற்புரையை மூத்த ஊடகவியலாளர் தி.எஸ் தில்லைநாதன் நிகழ்த்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சோ தண்டாயுதபாணி தேசிகர், யாழ். மறை மாவட்டத்தின் மூத்த குருவும் முன்னாள் ஊரணி மயிலிட்டி பங்குத்தந்தையும் லண்டன் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குநருமான அருட்தந்தை தேவராஜன் அடிகள் ஆகியோர் அஞ்சலி உரைகளை ஆற்றினர். தொடக்க உரையை வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு செயலாளர் ஆனந்தராஜ் ஆற்றினார் அதன்பின்னர் அறிக்கை அறிமுகம் இடம்பெற்றது. பிரதிகள் வழங்கலையும் தொடர்ந்து சிறப்புரைகளை மனித உரிமைகள் செயற்பாட்டாளர் பிறிட்டோ பெர்னானடோ மற்றும் வல்வெட்டித்துறை முன்னாள் பிரஜைகள் குழு தலைவர் செல்வேந்திரா ஆகியோர் ஆற்றினர்.

இலங்கையின் 'ஜாலியன் வாலாபாக்' என்று வர்ணிக்கப்படும் வல்வெட்டித்துறைப் படுகொலைகள் குறித்த இந்த அறிக்கை குறித்து உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளதாவது:

எண்பதுகளின் இறுதியில் இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய அமைதி காக்கும் படையினரால் 35 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட படுகொலையில் உயர் தப்பியவர்களின் வாக்குமூலங்களைத் தொகுத்து உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச திட்டம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது. இப்படுகொலையில் ஈடுபட்ட இந்திய இராணுவ அதிகாரிகளை அடையாளம் கண்டு, அவர்களை இப்படுகொலைக்குப் பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்புக் கோருவதுடன் அவர்களிற்கு இழப்பீடுகள் வழங்க வேண்டும் என்றும் இந்திய ஆளும்தரப்பிடம் இவ்வறிக்கை கோரிக்கை விடுக்கின்றது.

'ஒரு படுகொலையின் வாக்குமூலங்கள்' என்னும் இந்த அறிக்கையானது 1989 ஒகஸ்றில் வல்வெட்டித்துறை மக்களை இலக்கு வைத்து, மூன்று நாட்கள் திட்டமிட்டு நடாத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் விபரிக்கின்றது. இப்படுகொலையில் ஐந்து சிறுவர்கள், ஒரு குழந்தை உட்பட 60 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள். 'இறந்த சடலங்களின் துர்நாற்றமும், எரிந்த மணமும் கலைந்து போவதற்கு முன்னரே, உயிர்தப்பியவர்களிடமிருந்து வாக்குமூலங்களைக் கவனமாகப் பதிவுசெய்து, ஆவணப்படுத்திய தனியொருவரின் அசாதாரண செயற்பாடே இவ்வறிக்கை உருவாகுவதைச் சாத்தியமாகியது. அநியாயங்கள் நடைபெறும்போதே அவற்றை ஆவணப்படுத்துவது எதிர்காலப் பொறுப்புக்கூறல் செயற்பாட்டுக்கு செய்யப்படும் முதலீடாகும் என்பதே இதிலிருந்து கற்றுக்கொண்ட பாடமாகும்.

மேலும், "நீதி கிடைப்பதற்கான வாய்ப்புக் கிடைப்பதற்கு பல தசாப்தங்கள்கூட எடுக்கலாம், ஆனால், இழைக்கப்பட்ட மீறல்களும் துன்பங்களும் ஆவணப்படுத்தப்படாவிட்டால், இது சாத்தியமே இல்லை" இவ்வாறு சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

பாடசாலை அதிபராகவும், விஞ்ஞான ஆசிரியராகவும் இருந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அனந்தராஜ் என்பவர் இப்படுகொலை நிகழ்ந்தபோது தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, மயிரிழையில் உயிர் பிழைத்திருந்தார். சடலங்களை எரித்துவிட்டு, வெறும் ஒருசில நாட்களுக்குள்ளேயே பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து 200 வரையான சத்தியப் பிரமாணங்களைச் சேகரிக்கத் தொடங்கினார். பின்னர், அவர் டெல்லிக்குச் சென்று வல்வெட்டித்துறையில் நடந்ததை இந்திய ஆளும்தரப்பிடம் தெரிவித்தார். மேலும் 'வல்வைப் படுகொலை' என்னும் ஒரு புத்தகத்தையும் வெளியிட்டார்.

பல தசாப்தங்கள் நீடித்த போரில், அவரது வீடு இலங்கை இராணுவத்தினரால் பின்னர் தீக்கிரையாக்கப்பட்டது, அவர் சேகரித்த சத்தியப் பிரமாணங்களில் பாதிக்கும் மேல் இதில் அழிக்கப்பட்டன. இலண்டனில் நிகழ்ந்த ஒரு தற்செயலான கண்டுபிடிப்பே இச்சம்பவத்தை மீண்டும் கண்டறிந்துகொள்வதற்கு வழிவகுத்தது. தமிழ் தகவல் மையத்தின் காகித ஆவணங்களை டிஜிற்றல் மயமாக்கும்போதுதான் இக்கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. 'எண்பதுகளின் பிற்பகுதியில், பாதுகாத்து வைக்கப்படுவதற்காக விமானத்தபால் மூலம் இலண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆவணங்களை நான் வாசித்துக்கொண்டிருந்தபோதுதான் ஒரு கடிதம் எனது கவனத்தை ஈர்த்தது. இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த கப்டன் மேனன் என்பவர், 'தன்னிலை மறந்து செயற்பட்டதாகத் தோன்றினார்' எனக் குறிப்பிடப்பட்டிருந்த அக்கடிதத்தில், உள்ளூர் பிரஜைகள் குழுவைச் சேர்ந்த 12 உறுப்பினர்கள் கையொப்பமிட்டிருந்தனர். அப்பெயரைப் பார்த்ததும், என் மனதில் பொறி தட்டியது. இணையத்தில் தேடிப்பார்த்தபோது, அவரைப்பற்றிய பல தகவல்கள் வெளிப்பட்டன. அக்கடிதத்தில் கையெழுத்திட்டவர்களில் யாராவது இன்னும் உயிருடன் இருக்கிறார்களா என்று இலங்கையில் உள்ளவர்களிடம் கேட்டேன், ஆனால் பலன் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் ஒரு நாள், லண்டனில் உள்ள இளம் தமிழ் புகலிடக்கோரிக்கையாளர்களிடம் வல்வெட்டித்துறையில் இருந்து யாராவது இருக்கிறார்களா என்று கேட்டேன், மேலும் அவரகளுக்கு அந்தக் கடிதத்தைக் காட்டினேன். உடனடியாவே அதிலிருந்தவர்களின் ஒருவர் வல்வெட்டித்துறையிலிருந்த தன் நண்பனின் தாத்தாவுடன் என்னைத் தொடர்புபடுத்திவிட்டார்" இவ்வாறு இலண்டனிலுள்ள சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தி;ன இயக்குனர், பிரான்ஸிஸ் ஹரிசன் கூறினார்.

அனனந்தராஜ் சேகரித்து வைத்த பிரமாணப்பத்திரங்கள் மூன்று நாள் படுகொலையில் உயிர்பிழைத்தவர்களின் அனுபவப் பகிர்வினைப் பேணிப் பாதுகாக்கின்றன. வல்வெட்டித்துறை மக்கள் தங்கள் அன்புக்குரியவர்கள் தம்முன்னே இந்திய அமைதிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்படுவதை எவ்வாறு கண்டார்கள் என்பதை இவை விபரிக்கின்றன. காயமடைந்த பலர் உயிர் பிழைப்பதற்காக இரத்த வெள்ளங்களில் செத்தவர்களைப் போல பாசாங்கு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். ஒரு வயதான மீனவர், தன் பேரன்கள் இருவர் தனது வீட்டிற்குள் ஓடி வந்ததுபோது அவர்களை ஆரத்தழுவியதையும், ஆனால், அவர்களின் தாய் மார்பிலிருந்து இரத்தம் கொட்டியபடி ஓடிவந்து, தனது காலடியில் விழுந்து இறந்ததையும் விவரிக்கின்றார். அவள் சில ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழர்களுக்கு எதிரான வன்முறையில் தனது கணவனைப் பறிகொடுத்து, விதவையாகியிருந்தாள். மற்றொரு சம்பவத்தில், இந்திய சிப்பாய்கள் இரண்டு சகோதரர்களை அவர்களின் வீட்டிலிருந்து இழுத்து வெளியே கொண்டு வந்தனர், அவர்களின் வீடு தீக்கிரையாக்கப்பட்டது. அவர்களின் மனைவிகள் அவர்களை கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும்போது, அவர்கள் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் பெண்கள் மட்டுமே உயிர் பிழைத்தனர். அந்நேரத்தில் வெளிநாட்டில் வாழ்ந்த சிவகணேசனின் வீட்டிற்குள் இந்தியப் படைகள் உள்நுழைந்தபோது, அங்கு தஞ்சம் புகுந்திருந்த பெண்கள் சிப்பாய்களின் கால்களில் விழுந்து, தங்களைச் சுடவேண்டாம் என்று கெஞ்சினர். ஆனால் படையினரோ அவர்களை உதைந்து தள்ளிவிட்டனர்.

60 வயதுக்குட்பட்ட அனைத்து ஆண்களும் ஒரு மாட்டுத்தொட்டியின் அருகில் சோடி சோடியாக வரிசையாக நிறுத்தப்பட்டுச், சுடப்பட்டனர். அதேநேரத்தில், எட்டிப்பார்த்து அழுதவர்களையும் சுடப்போவதாக இந்தியப் படையினர் மிரட்டினர். சுப்ரமணியம் நிலஅளவை மேலாளராக இருந்து ஓய்வுபெற்றிருந்தார். அவரது வீட்டில் ஐம்பது வரையானவர்கள் அடைக்கலம் புகுந்திருந்தார்கள். வீட்டுக்குள் புகுந்த படைவீரர்கள் அவரை உடனடியாகச் சுட்டதுடன், இன்னொருவருடைய சட்டைப்பையிலிருந்த பணத்தையும் கொள்ளையடித்தார்கள். பின்னர், அங்கிருந்த பெண்களையும் குழந்தைகளையும் நோக்கிச் சுட்டார்கள். சீக்கியச் சிப்பாய் ஒருவன் காயமடைந்தவர்களின் இரத்தம் நிலத்தில் வழிந்து அவனது கால்களை வந்தடையும்வரை சுட்டுக்கொண்டிருந்தான். ரவைக்கூட்டை மாற்றி மீண்டும் சுடுவதற்குத் தயாரானபோது, அவனது சகா ஒருவனால் தடுத்து நிறுத்தப்பட்டான்.

பிறிதொரு சம்பவம் ஒன்றில், காயமடைந்தவர்களை சுட்டுக்கொல்லும்படி ஒரு படைவீரன் இன்னொருவனுக்கு உத்தரவிட்டபோது, அவர்கள் அனைவரும் இரத்தப்போக்கில் இருப்பதால், விரைவில் சாகத்தான் போகின்றார்கள் என்று பதில்கூறியதாக அச்சம்பவத்தில் உயிர்தப்பிய ஒருவர் நினைவுகூர்ந்தார். குறைந்தது 20 வரையானவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று அறிக்கைகள் தெரிவித்தன. இவர்களில் ஒருவரைத் தவிர மற்றையவர்கள் தங்களது அடையாளங்களை வெளிப்படுத்த விரும்பவில்லை. தனது வீட்டுக்குள் புகுந்த படைவீரர்கள், தனது குழந்தையை ஒரு மூலையில் இருக்கச்செய்துவிட்-டு, தனது வாயை ஒரு படைச்சிப்பாய் பொத்திப் பிடித்திருக்க இரண்டு சீக்கியப் படையினர் தன்னை மாறி மாறிப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர் என்று ஒருவர் வாக்குமூலம் வழங்கினார். இக்கொடுமையினை அக்குழந்தை பார்த்தபடி இருந்தது. நடந்த சம்பவத்தை வெளியில் சொன்னால், முழுக் குடும்பத்தையுமே கொன்றுவிடுவோம் என படைவீரர்கள் அப்பெண்ணை எச்சரித்துவிட்டுச்சென்றார்கள்.

ஒரு வீதியில் மட்டுமே இருபத்தி மூன்று வீடுகள் எரியூட்டப்பட்டன. இந்தியச் சிப்பாய்கள் சிரித்துக்கொண்டே மக்களின் வீடுகளை எரித்தனர் என்று நேரில் கண்ட சாட்சிகள் விவரித்தார்கள். கடைகள், திரையரங்குகள், நூலகம், வாகனங்கள், உணவுக் கையிருப்புக்கள், பயிர்கள், மீன்பிடி உபகரணங்கள் என எல்லாவற்றையும் இந்தியப் படையினர் எரியூட்டி அழித்தார்கள். இந்தியப் படையின் ரோந்து அணி மீது நடத்தப்பட்டதாக அவர்கள் விவரித்த பதுங்கித் தாக்குதலுக்குப் பழிவாங்கும் விதமாக ஒட்டுமொத்த சமூகத்திற்குமான கூட்டுத் தண்டனையாக இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டது.

பொதுமக்களை வறுமைக்குள்ளாக்கி, வீடற்றவர்களாக்கி, காயப்படுத்தி, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி, சித்திரவதை செய்து, துன்பங்களை ஏற்படுத்தி, கொலைசெய்ததுடன் அந்தநகரத்தின் பொருளாதாரத்தைச் சீரளிக்கும் நோக்குடன் நன்குதிட்டமிட்டே இந்த அழிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவே தோன்றுகின்றது. ஊரடங்கு அமுல்ப்படுத்தப்பட்டதனால், வல்வெட்டித்துறையில் சிக்குண்டிருந்தவர்கள் உடனடியாகவே பட்டியினியால் தவித்தார்கள். மூவாயிரம் வரையான மக்கள் தங்களது வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்தார்கள். ஆயிரம் வரையான மக்கள் படகுகளில் தென்னந்தியாவுக்குத் தப்பிச்சென்றார்கள். அந்நகரில் வசித்தவர்களில் பாதிப்பேர் பயத்தில் அல்லது விரக்தியில் அங்கிருந்து வெளியேறினர் என்று ஊடகவியலாளர் ஒருவர் வெளிப்படுத்தினார். இவர்களில் பலர் பிரித்தானியாவிலும் கனடாவிலும் தற்போது வசித்தாலும், ஆண்டுதோறும் இப்படுகொலையினை நினைவுகூருகின்றார்கள்.

உயிர் பிழைத்தவர்களால் விவரிக்கப்பட்டுள்ள கோரமான மீறல்களில் நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதை, கொடூரமான, அவமானகரமான மற்றும்

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

# பனையைத் தறித்து வாழ்வாதாரம் தேடுவது அலுக்கோசு வேலை செய்வதற்கு சமனானது

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் தெரிவிப்பு

(சுபேசன்)

அலுக்கோசு வேலையை வாழ்வாதாரத் தொழிலாக ஏற்றுக்கொள்ள முடியாது ;அது போன்றே பனை தறிப்பதனையும் வாழ்வாதாரமாக கருத முடியாது என பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைக்கு இணங்க பனை தறித்தல் தொடர்பான புதிய ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் வரை ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் பனை தறித்தல் தொடர்பான ஏற்பாடுகளை பின்பற்றப்போவதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் -பனை அபிவிருத்திச் சபைத் தலைவருக்கு அறிவித்திருந்த நிலையிலேயே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; -

பழைய நடைமுறைகள் புதிய அரசாங்கத்தில் பின்பற்றப்படமாட்டா என்பதை மன்னார் அரச அதிபர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

புதிய அரசாங்கம்-புதிய கொள்கை என்ற அடிப்படையில் தான் எமது நடவடிக்கைகள் அமையும்.

பனை மரம் தறித்தலை ஒருபோதும் வாழ்வாதாரமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு பனை மரத்தை பாதுகாத்து அதனூடாக வருடாந்தம் பல மில்லியன் வருவாயை பெற ஏதுவான நிலையில் பனை மரத்தை தறித்து வாழ்வாதாரம் நடத்துவது என்பதை ஏற்க முடியாது.

பனை மரத்தை வெட்டி வாழ்வாதாரம் செய்வது அலுக்கோசு வேலைக்கு சமனானது. சம்பளம் கூடிய தொழில் அலுக்கோசு தொழில். அதற்கான அலுக்கோசு தொழிலை அனுமதிக்க முடியாது. அது போன்றே பனை மரம் தறிப்பதையும் ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த விதத்தில் மன்னார் அரச அதிபரின் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

விரைவில் மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலர்களையும் ஒருங்கிணைத்து பனை ஆர்வலர்கள் மற்றும் பனை தறிப்பவர்கள் ஆகியோரை ஒரே நேரத்தில் அழைத்து கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு அரச அதிபரை கேட்டுக்கொள்கிறோம்.

பனை தறிப்பவர்களுடைய வாழ்வாதாரம் பனை மரத்தை வெட்டுவதில் அல்ல ; பனை மரத்தைப் பாதுகாப்பதில் தான் தங்கியுள்ளது.

இதனை அரச அதிபர் மற்றும் பனை மரத்தை வெட்டும் தொழிலை வாழ்வாதாரமாகப் பார்க்கின்ற மக்கள் பிரதிநிதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மன்னார் மாவட்டத்தின் நில வளம், நீர் வளம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியன பனை மரத்தில் தான் தங்கியுள்ளன. அதானி திட்டத்தில் 20 ஆயிரம் பனை மரங்களை அழிக்க அமைச்சரவை பத்திரம் ஊடாக



அனுமதி வழங்கப்பட்ட பின்னர் கூட பனை அபிவிருத்திச்சபையின் அதிகாரத்தைப் பயன்படுத்தி அதனை நிறுத்தினோம். அவ்வாறு நாம் தடுத்து நிறுத்தியது நன்மையா?தீமையா? என மக்கள் இப்போது உணர்வார்கள்.

பனை மரத்தைப் பாதுகாத்து அதனூடாக வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்ற உத்தரவாதத்தை பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் என்ற அடிப்படையில் நான் தருகிறேன். - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# நோன்பு உணவுகளின் சுகாதாரக் கலந்தாய்வு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் எதிர்வரும் ரமழான் காலத்தில் விசேடமாக உற்பத்தி செய்யப்படும் நோன்புக்கஞ்சி , உணவுப் பண்டங்கள் என்பனவற்றின் சுகாதார நிலைமைகளை பேணுவது தொடர்பான கலந்துரையாடல் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே மதன் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியும், சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவருமான டாக்டர் சனூஸ் காரியப்பர், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் ஏஎல்எம்.சலீம் (சர்க்கி), சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்திற்குட்பட்ட உணவு கையாளும் நிறுவன தலைவர்களும் பங்கு கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்வரும் ரமழான் காலத்தில் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்கள், கஞ்சி விநியோகம் போன்ற விடயங்களில் சுகாதார நடைமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைக்கு அமைவாக பொதுச் சுகாதார பரிசோதகர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

அதன்படி பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்தல், பிளாஸ்டிக் வாளிகளில் கஞ்சி வழங்குவதை முற்றாக நிறுத்துதல், தனிநபர் சுகாதாரம் பேணி கெப், ஏப்ரன் அணிதல், கஞ்சி தயாரிக்குமிடங்களை சுத்தமாகப் பேணுதல், சுத்தமான உணவுப்பொருள்களைக் கொண்டு ஆரோக்கியமான நபர்கள் மூலம் கஞ்சி தயாரித்தல், உணவைக் கையாள்பவர்களுக்கான மருத்துவ சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளல், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மூலமாக கஞ்சி விநியோகத்தை பரிசீலனை செய்தல், சிற்றுண்டி உணவகங்கள் கண்ணாடிப் பெட்டியில் உணவை காட்சிப்படுத்தல், சிற்றுண்டி தயாரிப்பை செய்பவர்கள் மருத்துவ சான்றிதழ் பெறல், கையுறை, தொப்பி போன்றவை கட்டாயமாக அணிதல், வாடிக்கையாளர் உணவை தெரிவதை தடுத்தல், ரமழான் காலத்தில் மட்டும் சிற்றுண்டி தயாரித்து விற்பனை செய்பவர்கள் தங்களை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலின் பின் அனைத்து வகையிலும் பங்களிப்பு வழங்குவோமென பங்குபற்றிய நிறுவனத் தலைவர்கள் உறுதி அளித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



# கிளிவெட்டி – குமாரபுரம் வன்முறைச் சம்பவத்தில் கைதாகி தடுத்துவைக்கப்பட்டவர்களுக்குப் பிணை

திருகோணமலை, கிளிவெட்டி - குமாரபுரம் வன்முறைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர்கள்,தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கானது மூதூர் நீதிமன்றில் வெள்ளிக்கிழமை நகர்த்தல் பத்திரத்தின் மூலம் நீதிபதி தஸ்னீம் பெளசான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டு பிணைக்கான விண்ணப்பம் செய்யப்பட்டபோது தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அந்தவகையில் திருகோணமலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 10 பேருக்கும் பிணை வழங்கப்பட்டு சனிக்கிழமை குறித்த நபர்கள் சிறைச்சாலையில் இருந்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் விபத்துச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு வாகனங்களினுடைய சாரதிகளுக்கும் வெள்ளிக்கிழமை பிணை வழங்கப்பட்டு அவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் குமாரபுரம் பகுதியில் சேருவில பகுதியில் இருந்து தெகிவத்தை நோக்கி பயணித்த பிக்கப் ரக வாகனமும் திருகோணமலையில் இருந்து ஈச்சிலம்பற்று நோக்கி பயணித்த ஓட்டோவும் 24.02.2025 காலை விபத்துக்குள்ளாகியது.

இச்சம்பவத்தில் பூமரத்தடிச்சேனையைச் சேர்ந்த 76 வயதுடைய பெண்ணும் குமாரபுரத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனும் காயமடைந்தனர்.

இதன்பின்னர் பிக்கப் வாகன சாரதியுடன் ஏற்பட்ட வாக்குவாதம் கைலப்பாக மாறியதால் தெகிவத்தை பகுதியில் இருந்து ஆயுதங்களுடன் வருகை தந்த 30 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் குமாரபுரம் கிராமத்திற்குள் உள்நுழைந்து தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன்போது அவ்விடத்திற்கு வருகைதந்த மூதூர் பொலிஸார் தெகிவத்தைப் பகுதியைச் சேர்ந்த 4 பேரையும், குமாரபுரம் பகுதியைச் சேர்ந்த 6 பேரையும் தொடர்ச்சியாக கைது செய்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# காந்தி தேசத்தின் கயமை

இந்தியா இதுவரையான காலத்தில் எதற்காக இலங்கை அரசை பன்னாட்டு அரங்கில் மிகக் கவனமாகப் பாதுகாத்து வந்ததோ அதில் ஒரு விடயம் திடீரென பன்னாட்டு அரங்கில் மேற்கிளம்பி வந்திருக்கிறது. இலங்கையில் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணைகள் இடம்பெறுவதை இந்தியா ஒருபோதும் ஆதரித்ததில்லை. அதற்கு இலங்கையிலும் இந்தியாவிலுமே இந்திய அரசு புரிந்த, புரிந்துகொண்டிருக்கின்ற மனித உரிமை மீறல்களே காரணம் என்கிற குற்றச்சாட்டு உண்டு. இலங்கையில் இந்திய அமைதிப் படையினராக நிலைகொண்டிருந்தபோதும் காஷ்மீர் மற்றும் இந்திய வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாதத்திற்கு எதிராக நடத்தும் போரிலும் நிகழ்த்தப்பட்ட தமது மனித உரிமை மீறல்கள் குறித்தும் சர்வதேச விசாரணைகளுக்கான அழுத்தங்களைத் தவிர்க்கவே இலங்கை அரசை புதுடில்லி பன்னாட்டு அரங்கில் பாதுகாக்கிறது என்று விமர்சகர்கள் குறிப்பிட்டு வருகின்றார்கள்.

இப்படி இந்தியா எதை மறைக்க முயன்றதோ அவற்றில் ஒரு சம்பவம் இப்போது பன்னாட்டு அரங்கின் கவனத்திற்கு வந்துள்ளது. இந்திய அமைதிப் படை ஈழத்தில் நிலைகொண்டிருந்தபோது வல்வெட்டித்துறையில் நிகழ்த்திய படுகொலைகள் பற்றிய அறிக்கை இப்போது வெளியாகி உள்ளது. இந்தப் படுகொலைகள் இந்தியாவின் ஜாலியன் வாலாபாக் படுகொலைகளுடன் ஒப்பிடப்படுபவை. ஜாலியன் வாலாபாக் படுகொலை எனப்படுவது பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியர்கள் கூட்டுப் பழிவாங்கல் நடவடிக்கையாக பிரிட்டிஷாரால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் குறிக்கின்றது.

13 ஏப்ரல் 1919 அன்று 6.5 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஜலியான்வாலா பாக் தோட்டத்தில் கூடியிருந்த இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய விடுதலை இயக்கத்தினர் மீது முன் அறிவிப்பு ஏதுமின்றி ஆங்கிலேயே இராணுவத்தின் பிரிகேடியர் ஜெனரல் ரெஜினால்டு எட்வர்டு ஹாரி டையர் தலைமையிலான படையினர் துப்பாக்கிகளால் தொடர்ந்து சுட்டனர். இதனை வரலாற்றில் ஜாலியன்வாலா பாக் படுகொலை என்பர். இதில் 379 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 1,110 பேருக்கும் மேலானோர் படுகாயம் அடைந்தனர்.

இப்படுகொலையில் இறந்த இந்திய விடுதலை இயக்கத்தினரை நினைவு கூறும் வகையில் இத்தோட்டத்தை 1951–ஆம் ஆண்டு இந்திய அரசு தேசிய நினைவுச்-சின்னமாக அறிவித்து. கொல்லப்பட்வர்களைத் தியாகிகளாக்கியது.

ஆனால், அதைவிட மோசமாக ஆயுதப் போராட்டத்துடன் எந்தவிதத்திலும் தொடர்பற்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அப்பாவி மக்களை இந்திய அமைத்திப் படையினர் கூட்டுத் தண்டனை முறையில் பழிவாங்குவதற்காகச் சுட்டுக்கொன்றனர். பெண்களை வன்புணர்ந்து சித்திரவதை செய்தனர். குழந்தைகளையும் கொன்று குவித்தனர். படுபயங்கரமான இந்தப் படுகொலைகளின் சாட்சிகள் இன்று சர்வதேச அறிக்கையாக வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கையின் இறுதிப்போர் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட வல்லுநர்கள் குழுவின் உறுப்பினராக இருந்தவரான யஸ்மின் சூக்கா தலைமையிலான உண்மை மற்றும் நீதிக்கான பன்னாட்டு திட்டம் என்ற இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான திட்டத்தினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

யாஸ்மின் லூயிஸ் சூகா ஒரு முன்னணி மனித உரிமை வழக்கறிஞர், தென்னாப்பிரிக்காவில் மனித உரிமைகள் அறக்கட்டளையின் நிர்வாக இயக்குநர் மற்றும் டெஸ்மண்ட் டுட்டு அமைதி மையத்தின் அறங்காவலராகவும் உள்ளார். அவர் தென்னாப்பிரிக்காவின் கேப் டவுனில் பிறந்தார், மேலும் விட்வாட்டர்ஸ்ராண்ட் பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டம் பெற்றார். அவர் நிலைமாறுகால நீதி, பாலினம் மற்றும் சர்வதேச போர்க்குற்றங்கள் குறித்த வல்லுநர்.

அவர் தென்னாப்பிரிக்க உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் மற்றும் சியரா லியோன் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் ஆகியவற்றின் உறுப்பினராக இருந்தார். தெற்கு சூடானில் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையத்தின் தலைவருமாவார். அவரது வழிநடத்தலில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ள கதைகள் மிகக் கொடூரமானவை. பயங்கரமானவை. சுமார் 35 வருடங்கள் கடந்து இந்தப் படுகொலைகள் பன்னாட்டு அரங்கின் கதவுகளைத் தட்டத் தொடங்கியிருக்கின்றன. இந்தப் படுகொலைகளுக்கு இந்தியா முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்கவேண்டும், குற்றவாளிகள் யார் என்று அடையாளம் கண்டு அவர்களின் விவரங்களை அறிவிக்கவேண்டும், அவர்களில் தற்போதும் உயிருடன் இருப்பவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கவேண்டும், குற்வாளிகளுக்கு பயணத்தடை மற்றும் பொருளாதாரத் தடைகளை மற்றைய நாடுகள் விதிக்கவேண்டும் என்றெல்லாம் இந்த அறிக்கை கோரிக்கை முன்வைத்துள்ளது.

அவற்றை ஏற்றுக்கொள்ளும் நேர்மையும் உன்னதமும் காந்தி தேசத்திடம் இருப்பதற்கான முகாந்திரம் எதுவும் இல்லை. ஆனால், நீதிக்கான காத்திருப்பு உறுதியோடு தொடரும் என்கிற நம்பிக்கையை இந்த அறிக்கை தந்திருக்கிறது.




# இனி உக்ரைன் என்ன செய்யும்?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

சர்வதேச அளவில் சர்ச்சைக்குரிய இந்த டிரம்ப் - ஜெலன்ஸ்கி விவகார வீடியோ வைரலாக பரவிய நிலையில், இது குறித்து பலரும் அதிர்ச்சியுடன் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். மோசமாக நிறைவுற்ற டிரம்ப்-ஜெலென்ஸ்கி சந்திப்பு குறித்து உலகத் தலைவர்கள் சமூக ஊடகங்கள் மூலம் பதிலளித்து வருகின்றனர்.

வெள்ளை மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி காலடி எடுத்து வைத்த போது மரியாதையை நிமித்தமான சந்திப்பு மிகவும் மோசமாக முடிவுறும் என அவர் நினைத்துபார்த்திருக்க மாட்டார்.



### நேட்டோ தலைவர்கள் உக்ரைனுக்கு ஆதரவு:

பிரெஞ்சு ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், உக்ரைனுக்கு மேற்கத்திய நாடுகள் தொடர்ந்து ஆதரவளிப்பதை வலியுறுத்தினார். ரஷ்யா ஆக்கிரமிப்பாளர், உக்ரைன் பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிவித்துள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உக்ரைனுக்கு உதவவும், ரஷ்யாவை தடை செய்யவும் முடிவெடுத்தோம். அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றார் பிரான்ஸ் பிரதமர்.

இந்த சம்பவத்தை தீவிரமானதும், வருத்தமளிக்கிறதும்' என்று நார்வே பிரதமர் ஜோனாஸ் காஹர் ஸ்டோர் கூறினார். ஜெலென்ஸ்கி மூன்றாம் உலகப் போரில் சூதாடுகிறார் என்ற டிரம்பின் குற்றச்சாட்டு மிகவும் நியாயமற்றது. சுதந்திரத்திற்கான போராட்டத்தில் உக்ரைனுடன் நார்வே நிற்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

### கனிம ஒப்பந்தம் காற்றில் ?

இந்த தகராறு வெடிக்க முன்னர், ரஷ்யாவின் படையெடுப்பை நிறுத்த பேச்சுவார்த்தைக்கு அமெரிக்க ஆதரவை உறுதிப்படுத்தவும், இந்த சந்திப்பு மூலமாக ஒரு முக்கியமான கனிம ஒப்பந்தத்தைப் பெறவும், ஜெலன்ஸ்கி நம்பிக்கை கொண்டிருந்தார்.

ஆனால் சந்திப்பு குழப்பத்தில் மூழ்கியது மட்டுமின்றி காரசார விவாதமாக மாறியது.

உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை 'சர்வாதிகாரி' என்று கூட டிரம்ப் சொன்ன பின்னரே டிரம்ப் ஜெலென்ஸ்கியுடன் இந்த சந்திப்பை நடத்தினார்.

சூடு பிடித்த விவாதங்களை தொடர்ந்து உக்ரைன் அதிபரை வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறச் சொல்லியும், கூட்டு பத்திரிகையாளர் சந்திப்பு ரத்து செய்யப்பட்டது.

ஜெலென்ஸ்கி 'மூன்றாம் உலகப் போருடன் சூதாடுகிறார்' என்று டிரம்ப் குற்றம் சாட்டியதுடன், ரஷ்யாவுடனான போரில் நீடிக்க உக்ரைனிடம் தகுதிகள் இல்லை என்றும் தெரிவித்தார். இத்தகைய உயர்மட்ட அரசாங்கத் தலைவர்கள் பொதுவாக கேமராக்கள் முன் சண்டையிடுவதில்லை. ஆனால் இம்முறை உக்ரைன் அதிபரின் சந்திப்பு குறித்து பரபரப்பாக பேசப்படுகிறது.

ஆரம்பத்தில் சுமூகமாக தொடங்கிய பேச்சு, ஒரு கட்டத்தில் கடுமையாக மாறியதன் விளைவாக எந்த ஒப்பந்தமும் கையெழுத்திடப்படவில்லை. கூட்டு அறிக்கை எதுவும் கூட வெளியிடப்படவில்லை. விவாதத்திற்கு பின்னர் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### பரபரப்பான ஓவல் அலுவலகம் :

எப்போதும் பரபரப்பான ஓவல் அலுவலக உயர்மட்ட சந்திப்பில் அமெரிக்கா அதிபர் டொனால்ட் டிரம்ப், துணை ஜனாதிபதி ஜேடி வான்ஸ் மற்றும் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அப்போது உக்ரைன் அதிபர் அவமரியாதை செய்ததாக ஜேடி வான்ஸ் குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து, ஒரு சர்ச்சைக்குரிய விவாதமாக மாறியது.

இதன் போது பதட்டங்கள் அதிகரித்த போது, டிரம்ப் தனது குரலை உயர்த்தி, உக்ரேனிய தலைவரை நோக்கி, 'நீங்கள் மூன்றாம் உலகப் போருடன் சூதாடுகிறீர்கள்' என்று காட்டமாக பேசினார்.

சமீபத்தில் ஜெலென்ஸ்கியை ஒரு 'சர்வாதிகாரி' என்று கூறியதை மீண்டும் சரி எனக் கூறியதுடன், அமைதியை உறுதி செய்ய இருதரப்புடனும் தான் பாரபட்சமின்றி நடந்து கொள்வதாகக் கூறினார்.

மேலும் புட்டினை எதிர்கொள்ள முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதிர்கொண்ட அணுகுமுறையே பாரிய மோதலுக்கு வழிவகுத்தது என்று வாதிட்டு, டிரம்பின் நிலைப்பாட்டை வான்ஸ் எதிரொலித்தார்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இனி ...

4ம் பக்கத் தொடர்ச்சி..........

**சூடான விவாதம்:**

புட்டினின் போர் நிறுத்த ஒப்பந்தங்களை மீறிய வரலாற்றை சுட்டிக்காட்டி ஜெலென்ஸ்கி விளக்கம் செய்தார். 'ஜே.டி., நீங்கள் என்ன வகையான ராஜதந்திரத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள்?' என்று அவர் கேட்டார். 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டதும் விவாதம் சூடானது.

'உங்கள் நாட்டின் அழிவை முடிவுக்குக் கொண்டுவரப் போகும் ராஜதந்திரத்தைப் பற்றி நான் பேசுகிறேன்' என்று வான்ஸ் அதிரடியாக பதிலடி கொடுத்தார்.

பின்னர் அவர் ஜெலென்ஸ்கியை கடிந்துகொண்டு'அமெரிக்க ஊடகங்கள் முன் இதை எதிர்த்து வழக்குத் தொடர ஓவல் அலுவலகத்திற்குள் நீங்கள் வருவது அவமரியாதை என்று நான் நினைக்கிறேன்' என்றும் கூறினார்.

'போரின் போது, அனைவருக்கும் பிரச்சினைகள் உள்ளன, நீங்கள் உட்பட. ஆனால் உங்களிடம் ஒரு நல்ல சூழல் உள்ளது, இப்போது அதை நீங்கள் உணரவில்லை, ஆனால் எதிர்காலத்தில் நீங்கள் உணருவீர்கள்.' என்றார் ஜெலன்ஸ்கி.


உடனே டிரம்ப் குறுக்கிட்டு'நாங்கள் என்ன உணரப் போகிறோம் என்று நீங்கள் சொல்லாதீர்கள். நாங்கள் ஒரு பிரச்சிணையைத்தீர்க்க முயற்சிக்கிறோம் என்றார்.

உடனே, 'நான் உங்களுக்குச் சொல்லவில்லை...' என்று ஜெலென்ஸ்கி தொடங்க, டிரம்ப் மீண்டும் இடைமறித்து,'நீங்கள் அதை ஆணையிடும் நிலையில் இல்லை. நாங்கள் என்ன உணரப் போகிறோம் என்பதை ஆணையிடும் நிலையில் நீங்கள் இல்லை.' என்றார் மிகக் கோபமாக.

இதனைத் தொடர்ந்து டிரம்ப் கடுமையான குரலில், 'நீங்கள் நல்ல நிலையில் இல்லை. உங்களிடம் இப்போது சாதகமான சூழல் இல்லை. எங்களுடன், நீங்கள் அதை பெறத் தொடங்குங்கள்' என்றும் கூறினார்.

டிரம்பின் கடுமையான வார்த்தையினால்விரக்தியடைந்ததாகத் தோன்றிய ஜெலென்ஸ்கி,'நான் சீட்டாட்டம்விளையாடவில்லை, நான் மிகவும் தீவிரமாக இருக்கிறேன், திரு. ஜனாதிபதி,' என்று அவரும் பதிலடி கொடுத்தார்.

டிரம்ப், சற்றும் தளராமல், 'நீங்கள் சீட்டாட்டம் ஆடுகிறீர்கள். நீங்கள் மில்லியன் கணக்கான மக்களின் உயிர்களுடன் சூதாடுகிறீர்கள். நீங்கள் மூன்றாம் உலகப் போருடன் சூதாடுகிறீர்கள், நீங்கள் செய்வது அமெரிக்க நாட்டிற்கு மிகவும் அவமரியாதைக்குரியது' என்று பதிலளித்தார்.



**நன்றி சொல்லாத உக்ரைன் ?**

அமெரிக்காவிற்குஜெலென்ஸ்கியின் நன்றியுணர்வை வான்ஸ் சவால் செய்ததால், அனல் பறக்கும் விவாதம் தொடர்ந்து மோசமடைந்தது. 'நீங்கள் ஒரு முறையாவது 'நன்றி' சொன்னீர்களா?' என்று ஜேடி வான்ஸ் கேட்டார்.

பல முறை தனது நன்றியைத் தெரிவித்ததாக ஜெலென்ஸ்கி வலியுறுத்தும்போது, வான்ஸ் மேலும் அழுத்தினார்: 'இல்லை, இந்த முழு சந்திப்பிலும், நீங்கள் 'நன்றி' சொன்னீர்களா?' என்றார். இறுதியாக நன்றி அமெரிக்கா என தெரிவித்த உக்ரைன் அதிபர் முகம் கோபமடைந்தது.

விவாதத்தின் இடையே டிரம்ப் திடீரென ஜெலென்ஸ்கியுடனான சந்திப்பை முடித்துக்கொண்டார். மேலும் அவர்களின் திட்டமிடப்பட்ட கூட்டு ஊடக உரையும் ரத்து செய்யப்பட்டது.

ஜெலென்ஸ்கியின் ஐந்தாவது வெள்ளை மாளிகை வருகையாகும். அத்துடன் ஜனாதிபதி டிரம்பின் கீழ் அவரது முதல் வருகையாகும். ஓவல் அலுவலக சந்திப்பிற்கு பிறகு உக்ரைன் தூதுக்குழு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

பின்னர் ஊடகங்களுக்கு பேட்டி அளித்த டிரம்ப், ஜெலென்ஸ்கி அமைதியை விரும்பும் ஒரு மனிதராகத் தெரியவில்லை என்றும் கூறியுள்ளார்.



# ரதல்லயில் சிறந்த கொழுந்து பறிப்பாளரை தெரிவுசெய்வதற்கான இறுதிப் போட்டி

(கிஷாந்தன்)

ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் பணியாற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்களுள், சிறந்த கொழுந்து பறிப்பாளரை தெரிவுசெய்வதற்கான இறுதிப் போட்டி நானுஓயா ரதல்ல தேயிலை மலையில் சனிக்கிழமை அன்று நடைபெற்றது.

ஹொரண, தலவாக்கலை மற்றும் களனிவெலிபெருந்தோட்ட நிறுவனங்களின் கீழுள்ள 60 தோட்டங்களில் ஆரம்பகட்ட போட்டிகள் நடைபெற்று, அவற்றில் வெற்றி பெற்றவர்களில் இருந்து 50 பெண் தொழிலாளர்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

20 நிமிடங்களில் அதிகமாக கொழுந்து பறிப்பவர் வெற்றியாளராக தெரிவுசெய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டது.




இப்போட்டியில் தலவாக்கலை, பெருந்தோட்ட நிறுவனத்தின் ஹொலிரூட் தோட்டத்தைச் சேர்ந்த அந்தனி இரேஷா ராஜலெட்சுமி முதலிடத்தை பெற்றார். அவர் மூன்று பிள்ளைகளின் தாய் ஆவார். அவரின் கணவர் கொழும்பில் பணிபுரிகின்றார் என்பதோடு, 18 வருடங்கள் இந்த பெருந்தோட்டத்துறையில் பணியாற்றுகின்றார் என்பதும் குறிப்பிடதக்கது.

அவர் 15 நிமிடங்களுக்குள் 08 கிலோ கொழுந்தை பறித்திருந்தார். போட்டியில் வெற்றி பெற்றதால் 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் தங்கப்பதக்கமும், தொலைக்காட்சி பெட்டி ஒன்றும் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்த போட்டி நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஹேலிஸ் நிறுவனத்தின் தலைவர் மொகான் பண்டித்தகே, நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் ரொஷான் ராஜதுரை உட்பட நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், தோட்ட முகாமையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாத்ரீகர்களுடன்சென்ற பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியது பாரவூர்தி

## 33 பேர் காயம்: 18 பேர் பெண்கள்

(முஹம்மட் றிஸ்னாத், ஹலால்தீன்)

மினுவங்கொடையிலிருந்து சேருவில பகுதியில் உள்ள வில்கம் விஹாரைக்கு யாத்ரீகர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸும் லொறியும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தானது சனிக்கிழமை மூதூர் இருதயபுரம் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

மேலும் விபத்தில் காயமடைந்த 33 பேரில் 18 பெண்களும், லொறியின்சாரதியும்மூதூர்வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மக்கள் சந்திப்பு

## நெடுந்தீவில் சனிக்கிழமை நடந்தது

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நெடுதீவுக்கான கள விஜயம் ஒன்று ஆணையாளர் பேராசிரியர் தைதனராஜ் தலைமையில் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இந்த களவிஜயத்தின்போது நெடுந்தீவு பிரதேச மக்களது மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் நெடுந்தீவிலுள்ள பொது அமைப்புகளிடமும் பொது மக்களிடத்திலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் கல்வி மற்றும் சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.



இந்த கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் தை. தனராஜ் ஆணைக்குழுவின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் சட்டத்தரணி கபிலன் வில்லவராயன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ், ஆணைக்குழுவின் மனித உரிமை அலுவலர் செல்வி குமுதினி சேவியர், நெடுந்தீவு பிரதேச செயலாளர் நிவேதிகா ,வேலணை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜெயக்குமார் மற்றும் தீவக கல்வி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் த.தருமலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு மக்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

மேலும் இந்த களவிஜயத்தின்போது, நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பிலும் பொறுப்புடைமை தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று இடம்பெற்றதுடன் நெடுந்தீவு பிரதேச வைத்திசாலைக்கும் விஜயம் மேற்கொண்டு அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆணைக்குழுவின் அதிகாரிகளால் ஆராயப்பட்டது. அத்துடன் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்துக்கும் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இந்த களவிஜயத்தின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் அடிப்டையில், பொறுப்புவாய்ந்த அரச திணைக்களபிரதானிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.




# இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறப்பு

இரணைமடு குளத்தின் நான்கு வான் கதவுகள் சனிக்கிழமை திறக்கப்பட்டன.

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக இரணைமடு குளத்தில் நீர்வரத்து அதிகரித்து வருகின்றது.

எனவே, கூடுதல் நீரை வெளியேற்றும் நோக்கத்தில், இரணைமடு குளத்தின் நான்கு வான்கதவுகள் சனிக்கிழமை திறக்கப்பட்டன.

இதனால் குளத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.





# யாழ். செம்பியன்பற்று வடக்கில் இரவோடு இரவாகக் காடழிப்பு

யாழ்வடமராட்சிகிழக்குசெம்பியன்பற்று வடக்கு பகுதியில் இயந்திரம் மூலம் இரவோடு இரவாக பெருமளவான காடு அழிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதுடன்சம்பவம்தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

அரச நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் அப்பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் குறிப்பிட்ட நிலப்பகுதியை தனிப்பட்ட தேவைகளுக்காக குத்தகை அடிப்படையில் பெற, வடமராட்சி கிழக்கு பிரதேசசெயலகம் ஊடாக ஆவன செய்துள்ளார்.

ஆவண கடிதத்தை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரிடம் கையளித்தவுடன் காடுகள் நிறைந்த சம்பந்தப்பட்ட பெருமளவானநிலப்பகுதியைஅனுமதியின்றி இயந்திரம் கொண்டு இரவோடு இரவாக முற்றாக அழித்துள்ளார்.

சம்பவம் அறிந்து அப்பகுதி மக்கள் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி தடுத்து நிறுத்த முற்பட்ட வேளையும் குறித்த நபர் தொடர்ந்து அனுமதியின்றி காடுகளை அழித்துள்ளார்.

இது தொடர்பாக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த நபர் குத்தகைக்கு காணியை பெறுவதற்கு கடிதம் தந்துள்ளதாகவும், காடுகளை அழிப்பதற்கு தாம் அனுமதியளிக்கவில்லை என்றும், குறித்த பிரதேசம் வனஜீவராசிகள் திணைக்களத்தினுள் இருப்பதால் தம்மால் அனுமதி கொடுக்க முடியாதென்றும் அவ்வாறு அவர் காடுகளை அழித்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிளில் கசிப்பு புதுக்குடியிருப்பில் விற்பனை

## இரு இளைஞர்கள் கைது

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் மோட்டார் சைக்கிளில் கசிப்பு விற்பனை செய்த இரண்டு இளைஞர்கள் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு விசுவமடு பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் விற்பனை செய்யப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர்.ஹேரத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிளை மறித்து சோதனை செய்த போது இளைஞர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசுவமடு பகுதியை சேர்ந்த 21, 26 வயதுடைய இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 55 லீற்றர் கசிப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணையின் பின்னர் சனிக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# சட்டவிரோத மதுபானத்துடன் புத்தளத்தில் ஒருவர் கைது

புத்தளம், முந்தல் பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானத்துடன் பெண் ஒருவர் வெள்ளிக்கிழமை இரவு முந்தல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முந்தல் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் புத்தளம், முந்தல் பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பெண் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து, 75 லீற்றர் சட்டவிரோத மதுபானம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கந்தளாய் சீனித் தொழிற்சாலை பயிர் செய்கைக்காக மக்களுக்கு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட கந்தளாய் சீனி தொழிற்சாலையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தற்காலிக காணி ஒதுக்கீடு மக்களுக்காக வழங்கி வைக்கப்பட்டன. ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவின் திட்டத்தின் பிரகாரம், கந்தளாய் சீனி தொழிற்சாலைக்கு சொந்தமான விவசாய நிலத்தை தற்காலிகமாக அப்பகுதி மக்களுக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்கும் சனிக்கிழமை கந்தளாய் நகர மண்டபத்தில் நடைபெற்றது.









கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர,வெளிவிவகாரமற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார ஆகியோர்கள் கலந்து கொண்டு அனுமதி பத்திரங்களை வழங்கி வைத்தனர்.

குறித்த தொழிற்சாலை பல வருட காலமாக செயழிலந்து காணப்பட்டமையால் குறித்த நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஶ்ரீபதி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





காலைக்கதிர் Kalaikkathir

## வல்வெட்டித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதாபிமானமற்றநடத்தை,தன்னிச்சையான கைது மற்றும் வலிந்து காணாமல்போதல் போன்றவை அடங்கும். போராளிகளையும் பொதுமக்களையும்வேறுபடுத்திப்பார்ப்பதற்கு இந்தியப் படைகள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. இலங்கையில் இந்தியப் படைகள் இருந்த 32 மாதங்களில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட மற்றைய அட்டூழியங்களுடன் பார்க்கையில், இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்டதும் பரந்துபட்டதுமான தாக்குதல்களின் ஒரு பகுதியாகவே இந்த வன்முறையும் இடம்பெற்றுள்ளதுடன், இவை எந்தவகையில் பார்த்தாலும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாக அமையலாம்.

இப்படுகொலையினை இந்தியா ஒப்புக்கொள்வதுடன், படுகொலைக்கு எழுத்துமூலமான மன்னிப்புக்கோரி, படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளும்மறுவாழ்வும்வழங்கவேண்டும் எனவும்இவ்வறிக்கைஇந்தியஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளது. வெளிப்படையான மன்னிப்புக்கோரலாக இருக்கவேண்டும். மேலும் இப்படுகொலை நடந்த நேரத்தில், கட்டளையிடும்நிலையில்இருந்தஅதிகாரிகளின் பெயர்களைவெளிப்படுத்தவேண்டும்என்றும், இவ்வன்முறைகளில்ஈடுபட்டவர்களை,அதிலும் குறிப்பாக தற்போதும் இந்திய இராணுவத்தின் உயர் பதவிகளில் இருக்கும் அதிகாரிகளை, குற்றவியல் ரீதியாகப் பொறுப்புக்குக்கூறலுக்கு உட்படுத்த வேண்டும் எனவும் இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கின்றது.

இவர்கள் மீது தடைகளையும், பயண உள்நுழைவுத் தடைகளையும் சர்வதேச சமூகம் விதிக்கவேண்டும் என்றும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் கோரிக்கை விடுப்பதுடன், இதில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ள நபர்கள் பற்றிய விவரங்களை ஐ.நா. மற்றும் இதர அரசுகளுக்கும் வழங்கியுள்ளது.

இந்த அறிக்கை இலங்கை ஆளும்தரப்பை வல்வெட்டித்துறைப் படுகொலை தொடர்பில் சுயாதீன விசாரணையை மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்டவர்களுக்குஇழப்பீடுவழங்குவதை உறுதிசெய்யவும் வேண்டுமென அழைப்பு விடுக்கின்றது. குறிப்பாக, இந்திய இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்டு, பத்து இளைஞர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியில் இருப்பதாகச் சொல்லப்படும் புதைகுழியினை தோண்டுவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இலங்கை ஆளும்தரப்பிடம் கோரிக்கை விடுக்கின்றது.

"இது பல தசாப்தங்களாக இலங்கையில் நடந்த நூற்றுக்கணக்கான படுகொலைகளில் ஒன்றுதான் இது என்பது எங்களுக்குத் தெரியும், ஆனால் இது அந்த நேரத்தில் மிகவும் கவனமாக ஆவணப்படுத்தப்பட்டது, மேலும் உடல்களின் எச்சங்கள் தோண்டி எடுக்கப்பட்டால், அவற்றை அடையாளம் காண்பது சாத்தியமாகும் என்பதுடன் இது குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் அவர்களது ஏக்கத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைக்கும். வல்வெட்டித்துறை நிகழ்வானது, உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான ஒரு பரிசோதனையாக இருக்கவேண்டும்" என்று ஜஸ்மின் சூக்கா கூறினார்.

## லஞ்சம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்காமல் தீர்த்து வைக்கவும், பிரச்சினையின்றி தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு அனுமதிப்பதற்குமாக 30,000 ரூபா இலஞ்சம் தருமாறு கல்னேவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் கேட்டனர் என்று கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட நபர் செய்த முறைப்பாட்டுக்கமைய நேற்று சனிக்கிழமை இரண்டுபொலிஸ்அதிகாரிகளையும் கல்னேவ பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கெக்கிராவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை மார்ச் 7வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## விவசாயத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வனவிலங்குகள் மற்ற தோட்டங்களுக்குத் தப்பிச் செல்வதையும், இரண்டு முறை எண்ணப்படுவதையும் தடுக்கவே, கணக்கெடுப்புக்கு ஐந்து நிமிடங்கள் என்ற வரையறை பயன்படுத்தப்படுவதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

இந்த வனவிலங்குகள் ஏன் காட்டை விட்டு வெளியேறி மனித வாழ்விடத்திற்கு வந்தன என்ற கேள்விக்கு இந்தக் கணக்கெடுப்புக்குப் பின்னர் ஒரு தீர்வு காணப்படும் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

காடுகளில் உள்ள விலங்குகளுக்கு போதுமான உணவு மற்றும் தண்ணீர் இருந்தால், வனவிலங்குகள் கிராமங்களுக்குள் படையெடுக்காது என்றும், எனவே, எதிர்காலத்தில் காடுகளை வளர்க்கும் திட்டம் தொடங்கப்படும் என்றும் துணை அமைச்சர் கூறினார்.

## இந்தியாவைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தும்போது இதனைத் தெரிவித்தார்.

அதானி கிரீன் எனர்ஜி- ஸ்ரீலங்கா மீள் சக்தி பெருந்திட்டம், இலங்கைக்கு மட்டும் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டமல்ல. அது மேலதிக மின்சக்தியை இந்திய மின் சுற்றுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கத்தை கொண்ட திட்டமாகும். அதற்காக இலங்கை- இந்திய மின் சுற்றுகள் இணைக்கப்பட இருந்தன. இந்த பெருந்திட்ட மின் உற்பத்தி கட்டமைப்பு மற்றும் இந்திய சுற்றுடனான தொடர்பு இணைப்பு ஆகியவற்றை அமைக்கும் மற்றும் பராமரிக்கும், பெரும் பொறுப்புகளை அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம்தான் ஏற்று இருந்தது என்பதை மறவாதீர்கள். அதுதான் முழுத் திட்டம். அதைப் புரிந்துகொள்ள இன்றைய இலங்கை அரசு தவறி விட்டது.

அதானியை நீங்கள் வெளியேற்றவில்லை. அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம்தான் உங்களை விட்டு வெளியேறி விட்டது. இது இன்று இலங்கை நோக்கி வரக்கூடிய சர்வதேச முதலீட்டாளருக்கு எதிர்மறை செய்தியை கொண்டு சென்றும் விட்டது.

இது தொடர்பில் இலங்கை நாடாளுமன்றத்தில் நான் உரையாற்றினேன். இலங்கை- இந்திய மின் சுற்று மூலம், இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் இலங்கை மின்சாரம் இலங்கைக்கு கொண்டு வரும் வருமானம் மூலம் இலங்கையில் மின்சார கட்டணங்களை குறைக்க முடியும். எதிர்காலத்தின் மீது கண் வைத்து தீர்மானம் எடுக்க தவறி விட்டீர்கள். அதானியின், யூனிட் விலை தொடர்பில் பிரச்சினை இருக்கும்போது, அதைப் பேசித் தீர்த்திருக்கலாம்.

மறுபுறம், இந்தச் சம்பவம், இலங்கை நோக்கி வரக்கூடிய சர்வதேச முதலீட்டாளருக்கு எதிர்மறை செய்தியை கொண்டு சென்றும் விட்டது. சமீபத்தில், இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஐக்கிய அரபு அமீரகத்துக்கு சென்று வந்தார். அங்கே என்ன நடந்தது? அங்கிருந்து ஏதாவது, முதலீடுகள் வருகின்றனவா? இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இந்திய பங்காளர்களுடன்தான் வருவார்கள். மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கையை நோக்கி முதலீட்டாளர்கள், இந்தியாவை பைபாஸ் செய்து வருவார்கள் என நினைக்கிறீர்களா? என்று அவர் தனது 'எக்ஸ்' தள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## பிணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்கள் 42 மற்றும் 46 வயதுடையவர்கள் என்றும் நவகத்தேகம மற்றும் உலுக்குளம பகுதிகளைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ புலனாய்வுப் பணியாளர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நேற்று கல்கிசை நீதிவானிடம் முற்படுத்தப்பட்டபோது இருவரையும் 10 இலட்சம் ரூபாய் சரீர பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

## 4ஆம் கட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி விடுவிப்புக்கு இணக்கம் காணப்பட்டது. எனினும் ஆளும்தரப்பின் வரவு செலவுத் திட்டத்திற்காக நாணய நிதியம் காத்திருந்தது.

மீளாய்வு மற்றும் வரவு செலவுத் திட்டத்தை அடுத்து, உத்தியோகத்தர் மட்ட இணக்கப்பாடு வெள்ளிக்கிழமை (28) சர்வதேச நாணய நிதியப் பணிப்பாளர் சபையினால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டம் குறித்த மூன்றாம் கட்ட மீளாய்வு இணக்கப்பாட்டுக்கு பணிப்பாளர் சபை ஒப்புதல் அளித்திருக்கிறது. அதனூடாக இலங்கைக்கு நான்காம் கட்டமாக 334 மில்லியன் டொலர் நிதி விடுவிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இலங்கைக்குக் கிடைக்கப்பெற்ற மொத்த கடன்நிதியின் பெறுமதி 1.34 பில்லியன் டொலராக உயர்வடையவுள்ளது.

## கள்ள மணல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்த நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். அவருடன் டிப்பரில் பயணித்தவர் என்று கருதப்படும் மற்றொரு நபர் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் இருந்து மணல் கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த டிப்பர் வாகனத்தை பருத்தித்துறை - பொன்னாலை வீதியில் பொலிஸார் மறித்தனர். பொலிஸாரின் சமிக்ஞையை மீறி டிப்பர் ஓடியதனால் அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

டிப்பர் வாகனத்தில் கஞ்சா துகள்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தில் தடயவியல் பொலிஸார் நேற்றுக் காலை விசாரணைகளை மேற்கொண்டதுடன், ஆதாரங்களையும் சேகரித்தனர்.

## பாடசாலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றத்தைக் குறிக்கும் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் மேலும் உத்தரவிட்டார்.

பொலன்னறுவை கவுடுலுவெவவைச் சேர்ந்த அதிபரான ரோஹித கமல் தர்மசேன மார்ச் 11 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழரசுக் கட்சியின் சகல மாவட்ட கிளைகளையும் செயலாளர் சந்தித்து வரும் நிலையில் இந்தக் கூட்டமும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தின் பின்னர் அது பற்றி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

மன்னாரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. கட்சியின் சகல அங்கத்தவர்களும் பங்கு பற்றினர்.

மன்னார் மாவட்டத்தில் போட்டியிட உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகள் குறித்தும் ஆராயப்பட்டது. வேட்பாளர்களை தெரிவு, குறிப்பாக வட்டார வேட்பாளர்கள், இரண்டாவது பட்டியல் வேட்பாளர்களை நியமிப்பது குறித்து ஆராயப்பட்டது.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட வேட்பாளர்களில் நாட்டில் இல்லாதவர்கள் மற்றும் வேறு கட்சியில் இணைந்தவர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. மிகவும் செல்வாக்கு உள்ளவர்களை வட்டார வேட்பாளராக நிறுத்துவது என ஏற்கனவே கட்சி எடுத்த தீர்மானத்துடன் மன்னார் மாவட்ட கிளையும் இணங்கி உள்ளது.

இதேவேளை, வெவ்வேறு அணிகளாகப் போட்டியிட்டாலும், தேர்தலில் பின்னர் ஆட்சி நிர்வாகங்களை அமைக்கின்ற போது சேர்ந்து செயற்படக்கூடிய வகையில், தேர்தலுக்கு முன்னர் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சபைகளுக்கும் ஏற்ற வகையில் தீர்மானங்கள் எடுக்கப்படும். அனைவரினதும் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டே முடிவுகள் எடுக்கப்படும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# ஊடகவியலாளருக்கு விருது வழங்கிக் கௌரவம்





(சியாஜ்)

புத்தளம் மதுரங்குளியிலிருந்து கடந்த 08 வருடங்களாக இணையதளம் ஊடாக தமிழ் பேசும் சமுகத்தின் குரலாக சமூக மாற்றத்தை நோக்கிய ஊடக பயணத்தை மேற்கொண்டு வரும் மதுரங்குளி மீடியா 2025 ஆம் ஆண்டின் பரிசளிப்பு விழாவையும் கௌரவிப்பு நிகழ்வையும் வெள்ளிக்கிழமை மதுரங்குளி டீரீம் மண்டபத்தில் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலையின் முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர் என்.எம் எம் நஜீப் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போதுபுத்தளத்தில் கடந்த 43 வருடங்களாக பல்வேறு ஊடகங்களிலும் செய்தியாளராகவும் சமூக சேவையாளராகவும் மக்கள் பணி செய்து வரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாதீனி எம் யூ.எம் சனூன் மற்றும் கற்பிட்டி பிரதேசத்தில்கடந்த25வருடங்களாக பல்வேறு பத்திரிகைகளிலும் செய்தியாளராகவும் கற்பிட்டியின் இருந்தது வெளிவந்த முதல் பத்திரிகையான அரவம் பத்திரிகையின் ஆசிரியர் பீட உறுப்பினராகவும், கற்பிட்டியின் முதலாவது மின்னிதழ் பத்திரிகையான கருப்புவெள்ளையின் பிரதம ஆசிரியராகவும் சமூக செயற்பாட்டாளராகவும் பணியாற்றி வரும் ஸ்ரீவிக்ரமகீர்த்தி எம் எச் எம் சியாஜ் ஆகிய இருவரையும் பாராட்டி கௌரவித்துள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் கற்பிட்டி பிரதேச சபைஉறுப்பினர் கே.எம்.எம் பைசர் மரைக்காரின் அழைப்பின் பேரில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் விரைவில்
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
340, Pointpedro Road, Jaffna.
தொடர்பு:070 7070 722

# சம்மாந்துறைப் பகுதிகளில் நரிகள் நடமாட்டம் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

வயல் அறுவடை இறுதி கட்டத்தை நெருங்கி இருக்கின்ற நிலையில் சம்மாந்துறை பகுதியில் நரிகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுகின்றது.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நெய்னாகாடு மல்கம்பிட்டி பகுதிகளில் இவ்வாறு நரிகளின் நடமாட்டம் தென்படுகின்றது.

இலங்கை நரிகள் அல்லது தென்னிந்திய குள்ள நரிகள் என அழைக்கப்படும் நரிகள் என குறிப்பிடப்படுகின்றது.

வயல்வெட்டுக்கள் அல்லது அறுவடை முடிந்து செம்பு நிறத்தில் காணப்பட்ட வயற்பகுதிக்குள் செம்பு நிறங்களில் நரிகளின் நடமாட்டம் தென்படுகின்றது.

வயலின் அடிக்கட்டை எது? நரி எது? என்று தெரியாத உருமறைப்புடன் அப்பகுதியில் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறான நரிகள் ஒரு சூழற்றொகுதியின் சமனிலைக்கு மிக முக்கியமானது. நரிகள் மயில்கள் போன்ற பீடைகளைக் கட்டுப்படுத்தியும், மற்ற சிறு வேட்டையாடிகளின் குடித்தொகைகளை சமனிலைப்படுத்தியும் விவசாயிகளுக்கும், மக்களுக்கும் நன்மைகள் பயக்கின்றன என இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் உயிரியல் விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், பிரிவுத் தலைவருமான ஏ.எம்.றியாஸ் அகமட் குறிப்பிட்டுள்ளார்.



# சுன்னாகம் ரோட்டரிக் கழகத்தின் இணையத்தளம் அங்குரார்ப்பணம்

(சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த புதன்கிழமை கழகத்தின் தலைவி தனிதா கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

மேற்படி இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக ரோட்டரி உதவி மாவட்ட ஆளுநர் ரகுராம் கலந்து சிறப்பித்திருந்தார்.

அத்துடன் குறித்த தினத்தில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய சஞ்சிகை ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








காலைக்கதிர்
Kalaikkathir

# சுகாதாரசேவை முறைப்பாடுகளுக்கு கியு.ஆர். குறியீட்டு முறை அறிமுகம்

(பாறுக் ஷிஹான்)

பொதுமக்கள் தங்களது சுகாதார சேவைகள் குறித்த முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காக கியு.ஆர். குறியீட்டு முறைமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கு அமைவாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் இதற்கான நடவடிக்கைகளை




முன்னெடுத்துள்ளார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொது இடங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்களில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கான இந்த கியு.ஆர். குறியீட்டு ஸ்டிக்கர் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்புவைத்திய அதிகாரியும் சாய்ந்தமருது ஜூம்ஆ பெரிய பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான டாக்டர் சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் சாய்ந்தமருது ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவரும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்திற்குட்பட்ட உணவு கையாளும் நிறுவனத் தலைவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.




# கணனி அபிருத்தி நிலையம் பெருந்தோட்டத்தில் திறப்பு

(கேதீஸ்)

பெருந்தோட்ட பகுதியில் மாணவர்களின் கணனி அறிவினை மேம்படுத்தும் வகையில் தெற்கு மடக்கும்புர பகுதியில் கணனி அபிவிருத்தி நிலையமொன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் , இ.தொ.கா வின் தவிசாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க வெள்ளவத்தை நித்தியகல்யாணி நகையக உரிமையாளர் ஜெயராஜாவின் நிதி அனுசரணையில் அவரால் திறந்து வைக்கப்பட்டது.

வட்டக்கொடை பகுதியிலுள்ள மாணவர்களின் கணனி அடைவு மட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் சனிக்கிழமை இந்த கணனி அபிவிருத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருதப்பாண்டி ராமேஸ்வரன், வெள்ளவத்தை நித்தியகல்யாணி நகையக உரிமையாளர் ஜெயராஜா ஆகியோர் கலந்துக்கொண்டனர்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி03.03.2025இல் வெளியிடப்பெற்றது